**கவனிக்க.**- *12.04.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1807 - 2013 අප්‍රේල් මස 19 වැනි සිකුරාදා - 2013.04.19

*1807 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 510 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 512 |


**கவனிக்க.**- (i) செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) திருமணப்பதிவு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, மே மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## சட்ட அலுவலர் (நிறைவேற்றுத் தரத்தின் தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்

*நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு – விலைமதிப்புத் திணைக்களம்*

விலைமதிப்புத் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிகள் இரண்டிற்கு பின்வரும் தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை குழுவொன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறின் மீது உச்ச புள்ளிகள் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். அதன் போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட (இலக்கம் 6 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் ஒழுங்கு விதிக்கேற்ப கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **தேவையான தகைமைகள்**.- (I) *கல்வி/தொழில்சார் தகைமைகள்*.- மேல் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக இருத்தல்/ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலே சட்டத் துறையில் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

(II) *அனுபவம்*.- மேல் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்னர் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான அனுபவமொன்றிருத்தல் வேண்டும்.

(III) *உடல்சார் தகைமைகள்*.- சகல அபேட்சகர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல்சார் மற்றும் உளசார் தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(IV) *ஏனையவை* :

- இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்தன்று பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **பணிக்கமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்**.-

(I) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள்/ தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய சம்பள முறைமைக்கு பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும்.

(II) இந்நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். சட்ட அலுவலர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்து 3 வருடத்தினுள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(III) பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் பிரகாரம் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 05 வருட காலப் பகுதியினுள் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(IV) 2009.02.20 ஆந் திகதிய இந்நியமனம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1589/30 ஆம் இலக்கம் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாகும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்தன்று 21 வயதிற்கு குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத் திட்டம்**.- இப்பதவிக்கு ரூ. 22,935 – 10 x 645 – 8 x 790 – 17 x 1,050 – 53,555 மாதாந்த சம்பள அளவுத் திட்டமொன்று உரித்துடையதாகும். (2006.04.25 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் : 06/2006 இன் பிரகாரம் SL1-2006 சம்பள தொகுதி)

6. கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் புள்ளி வழங்கல் நடைமுறை அடிப்படையாகக் கொள்ளப்படும் :-

| | | |
|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| 02 | மேலதிக தொழில்சார் தகைமைகள் | 15 |
| 03 | மேலதிக அனுபவம் (மேல் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக 3 வருடங்களுக்கு மேற்பட்ட தொழில்சார் தகைமைக்காக வருடம் ஒன்றிற்கு 5 புள்ளிகள் வீதம்) | 30 |
| 04 | ஆங்கில மொழி | 15 |
| 05 | கணனி திறன், தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு | 15 |
| 06 | நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறன் | 05 |
| | மொத்த புள்ளிகள் | 100 |

**குறிப்பு**.- (I) அனைத்து வழிகளிலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ளவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படுவர்.

(I) நேர்முகப் பரீட்சையின் போது அனைத்து சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் உரிய முறையில் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் என்பவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

7. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்**.- அனைத்து வழிகளிலும் பூரணப்படுத்திய விண்ணப்பங்களை அனுப்பியுள்ளவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின் போது தமது ஆளடையாளத்தை உறுதிப் படுத்துவதற்காக பின்வரும் ஆளடையாள பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் :-

(I) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

(II) செல்லுபடியான கடவுச் சீட்டு

8. (அ) விண்ணப்பப் படிவங்களை 2013.05.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அன்றைய தினத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :-

செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு,
செயலகக் கட்டிடம்,
கொழும்பு 01.

(ஆ) சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரியொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பப்படிவங்களை A4 அளவிலான கடதாசி ஒன்றில் தயாரித்து முதல் பக்கத்தில் 01 முதல் 08 வரையும், 02 ஆம் பக்கத்தில் இலக்கம் 09 -11 வரையும் 03 ஆம் பக்கத்தில் இலக்கம் 12(1)-12(11) வரையும் தயாரித்து தமது சொந்த கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் முலையில் ''விலைமதிப்பு திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர்/சமாதான நீதவான் ஒருவர்/ சத்திய ஆணையாளர் ஒருவர்/ சட்டத்தரணி ஒருவர்/ பிரசித்திபெற்ற நொத்தாரிசு ஒருவர்/முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவர் அல்லது ரூ.22,935 மாதாந்த திரண்ட சம்பளம் பெறும் அரசாங்க சேவையின் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(உ) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை தாம் பணியாற்றும் திணைக்களத்தின் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) இதனுடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் மாதிரிக் கேற்ப காணப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாக கிடைத்தல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **போலியான தகவல்களை வழங்குதல்**.- நீங்கள் அனுப்பிய விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனுமொரு தகவல் போலியானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் உங்களது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும்.

அவ்வாறு போலியான அல்லது தவறான தகவலொன்று ஆட்சேர்ப்புச் செய்ததன் பின்னர் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் கீழ் சேவையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

செயலாளர்,
நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு.

செயலகக் கட்டிடம்,
கொழும்பு 01.

4-651

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, வைகாசி மாதம் 20 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, பங்குனி 25.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | பசறை | யட்டிகின்ட பிரிவில் மேலதிக விவாகப் பதிவாளர் பதவி (கண்டிய/பொது) | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், பதுளை |

4-477

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2012 (2013)

மேலே குறிப்பிடப்பட்ட சேவையில் உள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாத ஆரம்பத்தில் பேராதனையில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே முறையில் தோற்றக்கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடவிதானம்**.- முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்குப் பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் அதன் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான I ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான பாடத்திட்டம் இணைப்பு 'அ' வில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வினைத்திறன்காண் பரீட்சைகளின்போது பாடங்களுக்கு அமர்கையில் ஒரே தடவையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

4. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் I ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய பாடங்கள் பின்வருமாறு :

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை

| I ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | | |
|---|---|---|
| தொடர் இல. | விடயம் | நேரம் (மணி) |
| 01 | நிதி முறைமைகள் | 03 |
| 02 | நிருவாகம் | 03 |
| 03 | திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் I | 02 |
| 04 | திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் II | 03 |
| 05 | விசேட வினாப்பத்திரம்* | 03 |

*கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

5. கீழே தரப்பட்டுள்ள 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான திறைசேரி சுற்றறிக்கையில் 5 ஆம் பந்தியைக் கவனிக்குமாறு இவ்வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

திணைக்களப் பரீட்சைகளுக்குத் (பதவி உயர்வு மற்றும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை உட்பட) தோற்றும் மொழி உத்தியோகத்தர் அரச சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியிலாகும் அல்லது அரச கரும மொழியிலாகும். போட்டிப் பரீட்சை இல்லாமல் நேரடியாக சேவைக்குச் சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான மொழியாக இருக்கவேண்டியது உத்தியோகத்தர்கள் சேவையில் சேர்ந்துகொள்வதற்கு தகுதிபெற்ற அல்லது அரச கரும மொழியாகும்.

6. இப்பரீட்சையின் பொருட்டு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விடையளிக்க பரீட்சார்த்திகளுக்கு இயலுமாகின்ற வகையில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பம் செய்த மொழிமூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

7. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தில்லாத மொழியில் பரீட்சைக்குத் தோற்றியமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தத் தன்மை நீக்கப்படும்.

8. விண்ணப்பப்படிவங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் தொடர் இலக்கம் 1 முதல் 8 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்தில் அமையுமாறும் தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இயைய அமையாத விண்ணப்பங்களும் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் ஒளிப்பிரதி ஒன்றினை வைத்துக்கொள்ளவும் மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிழும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவார். இவ்விதிகளும் பிரமாணங்களும் இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.

10. விண்ணப்பப்படிவங்கள் யாவும் 2013.05.23 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் :-

> கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
> கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
> கெட்டம்பே, பேராதனை

11. விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திற்கு அறியக்கொடுத்தல் வேண்டும். நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் ஒளிப்படப்பிரதி மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுபடுத்தப்பட்ட ஒளிப்படப் பிரதி மற்றும் பதிவுத் தபாலிட்ட பற்றுச்சீட்டுடன், கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின் அனுமதி அட்டையை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினைக் குறிப்பிட்டு உங்களது வேண்டுகோள் கடிதத்துடன் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு அறியக்கொடுப்பது சிறந்ததாகும்.

12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

13. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டு மாத்திரமேயாகும்.

14. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளது :-

(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) இதன்பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக-

| | |
|---|---|
| முழுப்பரீட்சை | - ரூபா 1,000.00 |
| ஒரு பாடம் | - ரூபா 500.00 |

இப்பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியுள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைக்குமாறு தீவில் அமையப்பெற்றுள்ள எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலாளர் பணிமனையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் ஒளிப்படப் பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும்.

15. விண்ணப்பக்காரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

கே. எம். ரீ. கேந்தரகம,
செயலாளர்,
கால்நடை வள மற்றும்
கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு.

கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு ,
இல. 45, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03,
2013.03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பரீட்சைத் திணைக்களம் - இலங்கை**

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – 2012 (2013)
First Efficiency Bar Examination for the Officers in Sri Lanka Animal Production and Health Service - 2012 (2013)

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :- சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(உதாரணம் NIMALASIRI, K. A)

(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

2. பிறந்த திகதி :- ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3. பதவிப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
திணைக்களத்தின் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

4. தபால் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக)

5. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.

6. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள் (தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்) :-

(i) பாட எண் ☐☐ பாடம் ..............
(ii) பாட எண் ☐☐ பாடம் ..............
(iii) பாட எண் ☐☐ பாடம் ..............
(iv) பாட எண் ☐☐ பாடம் ..............
(v) பாட எண் ☐☐ பாடம் ..............

7. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக :----.

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும் விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரித்தாவேன் எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

9. செலுத்தப்பட்ட பரீட்சைக்கட்டணம் : ரூபா ----.
பணம் செலுத்தப்பட்ட பணிமனை :----. பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| |
|---|
| பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்துக்கொள்ளவும்) |

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினூடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் :**

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமையுடையவரென்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது எனவும், *விண்ணப்பதாரர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஒட்டி உள்ளார் எனவும், பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப்பெயரும்.

திகதி :----.
(*கட்டணம் செலுத்தாதவிடத்து வெட்டிவிடவும்)

*பின்னிணைப்பு "அ"*

(அ) இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின்போது பின்வரும் பாடங்களில் சித்தி அடைதல் வேண்டும் :-

1. நிதி முறை
2. நிருவாகம்
3. திணைக்களப் பிரமாணங்கள் I
4. திணைக்களப் பிரமாணங்கள் II

(1) *நிதிமுறை*.- நிதி என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :

(அ) இலங்கை அரசாங்க நிதி ஒழுங்குவிதி (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் - X ஆம் அத்தியாயம் தவிர)

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறல் வேண்டும்.

(2) *நிருவாகம்*.- நிருவாகம் என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :

(அ) அலுவலக முறை, அலுவலக முகாமை மற்றும் அலுவலக ஒழுங்குபடுத்தும் முறைமைகள் தொடர்பான அறிவு
(ஆ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதியினூடாக திருத்தம் செய்யப்பட்ட தாபனவிதிக்கோவை அத்தியாயம் I, II, III, V, VI மற்றும் தாபனவிதிக்கோவையின் VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XIX, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII அத்தியாயங்கள்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

(3) *திணைக்களப் பிரமாணங்கள் I*.- திணைக்களப் பிரமாணம் என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :-

இப்பரீட்சை வினாத்தாள் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கிய இரண்டு மணித்தியால வினாப்பத்திரமாகும்.

விலங்குச் சட்டம், விலங்கு நோய்ச் சட்டம் மற்றும் திணைக்கள கட்டளை கால்நடை வைத்திய சேவைக்கு பொருத்தமான சுற்றுநிருபங்கள்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

(4) *திணைக்களப் பிரமாணங்கள் II.-* திணைக்களப் பிரமாணம் என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட 3 மணித்தியால வினாப்பத்திரமாகும் :-

(அ) மாதிரிகளை அனுப்புதல், பிரேத பரிசோதனை உள்ளிட்ட நோய் ஆய்வு, உறுதி ஆய்வுகூட பரிசோதனை முறைகள், கர்ப்ப பரிசோதனை உள்ளிட்ட இனங்காணும் பரிசோதனை, வெளிக்கள நோய் ஆய்வு உறுதி பரிசோதனை, விலங்குகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்து, குருதி பாயம் (Sera) ஆகிய முற்காப்பு நடவடிக்கைகள் ;

(ஆ) செயற்கைமுறைச் சினைப்படுத்தல் செயல்முறையும் தொழிநுட்பமும், இனப்பெருக்கத்தின் அடிப்படைத் தத்துவங்களும் கன்று வளர்ப்பும், அடைகாத்தல், குஞ்சு பொரித்தல், கோழிக்குஞ்சு வளர்ப்பு, கால்நடைகளுக்கான போஷணை, உணவுப் பண்டம், பசுந்தீவனப் பயிர்ச்செய்கை, வெவ்வேறுபட்ட பயிர்கள், புற்செய்கை, உலர்புல், சைலேஜ் தயாரிப்பு, கால்நடைப் பராமரிப்பு என்பன ;

(இ) பால் உற்பத்தி, கிருமியழிக்கப்பட்ட பாலை போத்தல்களில் அடைத்து எடுத்துச் செல்லல், பால் சுகாதாரம், பாதுகாப்பு, பால் ஆடை பகுத்தல் உள்ளடங்கலாக பரிசீலனை செய்தல், பால் ஆடை நீக்கல், பட்டர் நெய் மற்றும் தயிர் உற்பத்தி ;

(ஈ) அறுப்பு நிலையம், விலங்கு அறுப்புச் செய்தல், இறைச்சிகளை இனங்காணுதல் உட்பட இறைச்சிகளை பரீட்சித்தல்.

***குறிப்பு**.-* பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

*4-641/1*

---

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2012 (2013)**

மேலே குறிப்பிடப்பட்ட சேவையில் உள்ள அலுவலர்களுக்கான II ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாத ஆரம்பத்தில் பேராதனையில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே முறையில் தோற்றக்கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடவிதானம்**.- இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்குப் பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் அதன் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான II ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான பாடத்திட்டம் இணைப்பு 'அ' வில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வினைத்திறன்காண் பரீட்சைகளின்போது பாடங்களுக்கு அமர்கையில் ஒரே தடவையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

4. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் II ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய பாடங்கள் பின்வருமாறு :

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை**

| II ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | | |
|---|---|---|
| தொடர் இல. | விடயம் | நேரம் (மணி) |
| 01 | 1 ஆம் பகுதி | 03 |
| 02 | 2 ஆம் பகுதி | 03 |
| 03 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் I | 03 |
| 04 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் II | 03 |
| 05 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் III | 03 |
| 06 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் IV | 03 |
| 07 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் V | 03 |
| 08 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் VI | 03 |
| 09 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் VII | 03 |
| 10 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் VIII | 03 |
| 11 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் IX | 03 |
| 12 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் X | 03 |
| 13 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் XI | 03 |

**குறிப்பு**.- இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை விண்ணப்பதாரிகள் அமரவேண்டியது பகுதி 1 அல்லது பகுதி 2 வினாப்பத்திரம் இரண்டில் ஒன்றுக்கும் மற்றும் பகுதி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள XI வினாப்பத்திரங்களில் இருந்து இரு வினாப்பத்திரங்களுக்கு மட்டும் அமரல் வேண்டும். சித்தி எய்துவதன் பொருட்டு ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் பெறுதல் வேண்டும்.

5. கீழே தரப்பட்டுள்ள 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான திறைசேரி சுற்றறிக்கையில் 5 ஆம் பந்தியைக் கவனிக்குமாறு இவ்வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

திணைக்களப் பரீட்சை (பதவி உயர்வு மற்றும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை உட்பட) க்குத் தோற்றும் மொழி உத்தியோகத்தர் அரச சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியிலாகும் அல்லது அரச கரும மொழியிலாகும். போட்டிப் பரீட்சை இல்லாமல் நேரடியாக சேவைக்குச் சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான மொழியாக இருக்கவேண்டியது உத்தியோகத்தர்கள் சேவையில் சேர்ந்துகொள்வதற்கு தகுதிபெற்ற அல்லது அரச கரும மொழியாகும்.

6. இப்பரீட்சை பொருட்டு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விடையளிக்க பரீட்சார்த்திகளுக்கு இயலுமாகின்ற வகையில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பம் செய்த மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது :-

7. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தில்லாத மொழியில் பரீட்சைக்கு தோற்றியமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தத் தன்மை நீக்கப்படும்.

8. விண்ணப்பங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் தொடர் இலக்கம் 1 முதல் 8 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்தில் அமையுமாறும் தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இயைய அமையாத விண்ணப்பங்களும் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி ஒன்றினை வைத்துக்கொள்ளவும் மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிழும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவார். இவ்விதிகளும் பிரமாணங்களும் இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.

10. விண்ணப்பப்படிவங்கள் யாவும் 2013.05.23 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் :-

கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
கெட்டம்பே, பேராதனை

11. விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திற்கு அறியக்கொடுத்தல் வேண்டும். நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுபடுத்தப்பட்ட ஒளிப்படப் பிரதி மற்றும் பதிவுத் தபாலிட்ட பற்றுச்சீட்டுடன், கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின் அனுமதி அட்டையை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினைக் குறிப்பிட்டு உங்களது வேண்டுகோள் கடிதத்துடன் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு அறியக்கொடுப்பது சிறந்ததாகும்.

12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

13. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டு மாத்திரமேயாகும்.

14. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளது :-

(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்படமாட்டாது.
(ஆ) இதன்பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக-

| | |
|---|---|
| முழுப்பரீட்சை | - ரூபா 1,000.00 |
| ஒரு பாடம் | - ரூபா 500.00 |

இப்பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியுள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைக்குமாறு தீவில் அமையப்பெற்றுள்ள எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலாளர் பணிமனையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் ஒளிப்படப் பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும்.

15. விண்ணப்பக்காரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

கே. எம். ரீ. கேந்தரகம,
செயலாளர்,
கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு.

கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு ,
இல. 45, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03,
2013.03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பரீட்சைத் திணைக்களம் - இலங்கை**

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – 2012 (2013)
Second Efficiency Bar Examination for the Officers in Sri Lanka Animal Production and Health Service - 2012 (2013)

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :- சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(உதாரணம் NIMALASIRI, K. A)

(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

2. பிறந்த திகதி :- ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3. பதவிப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
திணைக்களத்தின் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

4. தபால் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக)

5. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.

6. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள் (தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்) :-

(i) பாட எண் ☐☐ பாடம் ..............
(ii) பாட எண் ☐☐ பாடம் ..............
(iii) பாட எண் ☐☐ பாடம் ..............
(iv) பாட எண் ☐☐ பாடம் ..............
(v) பாட எண் ☐☐ பாடம் ..............

7. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக :----.

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும் விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரித்தாவேன் எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

9. செலுத்தப்பட்ட பரீட்சைக்கட்டணம் : ரூபா ----.
பணம் செலுத்தப்பட்ட பணிமனை :----. பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்துக்கொள்ளவும்) |
|---|

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினூடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் :**

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமையுடையவரென்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது எனவும், *விண்ணப்பதாரர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஒட்டி உள்ளார் எனவும், பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப்பெயரும்.

திகதி :----.
(*கட்டணம் செலுத்தாதவிடத்து வெட்டிவிடவும்)

*பின்னிணைப்பு "அ"*

(அ) இலங்கை கால்நடைவள உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின்போது பின்வரும் பாடங்களில் சித்தியடைதல் வேண்டும் :-

பகுதி I – பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும் :-

2.1, 2.2, 4.1, 4.2, 5.2, 5.8, 6.5, 7.2.1, 8.2, 8.2.2, 8.2.3, 8.3.1, 9.2, 9.4, 9.6, 9.7 பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பகுதி II – பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும் :-

1.1.1, 1.1.4, 1.2.1, 3.2, 3.1.1, 3.1.2, 3.2.1, 10.1.1, 10.1.2, 10.1.3, 10.1.4, 10.1.6, 10.2.1, 10.2.8, 10.4.1 பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும். இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பகுதி III –

| | |
|---|---|
| வினாத்தாள் I | - தொற்றுநோயியல் |
| வினாத்தாள் II | - கால்நடைப் பொருளியல் |
| வினாத்தாள் III | - மிருக வைத்திய பொதுச் சுகாதாரம் |
| வினாத்தாள் IV | - விவசாய விஸ்தரிப்பு |
| வினாத்தாள் V | - பரம்பரையியலும் சினைப்படுத்தலும் |
| வினாத்தாள் VI | - விலங்கு உடற்றொழிலியலும் இனப்பெருக்கமும் |
| வினாத்தாள் VII | - வீடமைப்பு முகாமைத்துவம் |
| வினாத்தாள் VIII | - விலங்குப் போசணை |
| வினாத்தாள் IX | - பசும்புல் மற்றும் விலங்கு தீவனப் பயிர் |
| வினாத்தாள் X | - பிரயோக மிருகவியல் நுண்ணுயிரியலும் நீர்ப்பீடணவியலும் |
| வினாத்தாள் XI | - பிரயோக மருத்துவம், நோயியல் மற்றும் ஒட்டுண்ணியல் |

**குறிப்பு.**- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

*4-641/2*

## கல்வி அமைச்சு

### இலங்கை அதிபர் சேவையின் 1, 2-I, 2-II, 3 ஆம் வகுப்புகளின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2013

இலங்கை அதிபர் சேவையின் 1, 2-I, 2-II, 3 ஆம் வகுப்புகளின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை 2013, ஓகத்து மாதம் கொழும்பில் நடைபெறும் என்பதனை இத்தால் அறியத்தருகிறேன்.

2. இப்பரீட்சைகளின் உரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் இல. 1086/26 கொண்ட 1999.07.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதிக்காக இப்பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. (45 வயதைத் தாண்டிய உத்தியோகத்தர்கள் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விடுவிக்கக்கூடியவாறு இலங்கை அதிபர் சேவையின் பிரமாணக் குறிப்பின் 27 ஆவது வாசகத்தின் 'ஈ' பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் 2001.09.12 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 20/2001 ஒழிக்கப்பட்டுள்ளமையினால் அதிபர் சேவைக்குரிய சகல உத்தியோகத்தர்களும் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.) :

(அ) பரீட்சை ஒழுங்குவிதிகள்.- வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையின் பாடங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

பாட இல. 1 - தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் :

1 ஆவது பகுதி - 50 பல்தேர்வு வினாக்கள்
(நேரம் : ஒரு மணித்தியாலயம்) - 50 புள்ளிகள்

2 ஆவது பகுதி - கட்டமைக்கப்பட்ட வினாத்தாள்
(நேரம் : ஒரு மணித்தியாலயம்) - 50 புள்ளிகள்

பாட இல. 2 - பாடசாலைகளின் நிதி நிருவாகம் :

1 ஆவது பகுதி - 50 பல்தேர்வு வினாக்கள்
(நேரம் : ஒரு மணித்தியாலம்) - 50 புள்ளிகள்

2 ஆவது பகுதி - கட்டமைக்கப்பட்ட வினாத்தாள்
(நேரம் : ஒரு மணித்தியாலம்) - 50 புள்ளிகள்

பாட இல. 3 - கல்வி நிருவாகம் மற்றும் மேற்பார்வை :

1 ஆவது பகுதி - 50 பல்தேர்வு வினாக்கள்
(நேரம் : ஒரு மணித்தியாலம்) - 50 புள்ளிகள்

2 ஆவது பகுதி - கட்டமைக்கப்பட்ட வினாத்தாள்
(நேரம் : இரண்டு மணித்தியாலம்) - 50 புள்ளிகள்

கல்வி அமைச்சின் கொள்கை மாகாணக் கல்வித் திணைக்களம் உட்பட அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், நிறுவனங்களின் ஒழுங்கமைப்பு மற்றும் பணிகள் பாடசாலை நிருவாகம், பாடசாலை மற்றும் சமுகத்திற்கிடையிலான தொடர்பு, பாடசாலை மேற்பார்வை மற்றும் ஆசிரியர்களின் செயற்சாதனை மதிப்பீடு மற்றும் தேசிய, பிரதேச மற்றும் பாடசாலை மட்டத்திலான கல்வித் திட்டமிடல்கள்.

3. சித்தியடைவதற்காக பரீட்சார்த்தி விண்ணப்பிக்கும் அவ்வப் பாடங்களில் குறைந்தபட்சம் 40% அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

4. **பரீட்சையின் மொழி மூலம்**.- சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் (விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றியமைக்கப்பட மாட்டாது.)

(i) பரீட்சார்த்திக்கு அரச கரும மொழிமூலம் பதிலளிக்க முடியும்

அல்லது

(ii) பரீட்சார்த்தி அரச சேவையில் பிரவேசிப்பதற்காகத் தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழிமூலம் அல்லது போட்டிப் பரீட்சை இன்றி அரச சேவைக்கு இணைந்திருப்பவர்கள் தொடர்பில் அவர்கள் அரச சேவைக்கு பிரவேசிக்க தகைமைபெற்ற மொழிமூலம் பதிலளிக்க வேண்டும்.

5. பரீட்சார்த்தி தமக்குரியதல்லாத மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும்.

5.1 பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளினதும் பரீட்சைப் பெறுபேறுகள் அடங்கிய பெறுபேற்றுப்பத்திரம் செயலாளர், கல்வி அமைச்சு அவர்களிடம் கையளிக்கப்படும். தனியார் பெறுபேற்றுச் சான்றிதழ்கள் பரீட்சை ஆணையாளரினால் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட மாட்டாது.

6. கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இல. 1 தொடக்கம் 6 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப் படுவதுடன் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும் என்பதை அறியத்தருகிறேன். மேலும் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரி விளக்கம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் அறியத்தருகிறேன். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியம் என்பதை அறியத்தருகிறேன்.

7. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படுவதுடன் அதனை நடாத்துவதற்காக அவரினால் விடுவிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளை பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார். பரீட்சைக்கான சட்ட ஒழுங்குகள் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

8. விண்ணப்பப்படிவத்தை 2013, மே 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பத்தரமுல்லை, பெலவத்தை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கக் கூடியவாறு, அதிபர்/கோட்டக் கல்விப் பணிப்பாளர்/வயலக் கல்விப் பணிப்பாளர்/மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அல்லது தங்களது சேவை நிலையப் பொறுப்பாளர் ஊடாக பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

9. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவம் மற்றும் நிதி செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிசெய்யப்பட்ட நிழற்படப் பிரதியையும் பதிவுத் தபாலில் இடப்பட்ட பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியேயாயின் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தையும் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவது பொருத்தமாகும். பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டல்ல :

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(iii) பரீட்சார்த்தியின் முகவரி ;
(iv) விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட திகதி, பதிவு இலக்கம் மற்றும் தபால் அலுவலகம் ;
(v) அண்மையில் உள்ள தகவல் தருனர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிப்பதற்காக ஆலோசனை வழங்கப்படும்.

10. மேற்கூறப்பட்ட 8 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்ட தேவைகளை நிறைவேற்றத் தவறும் பரீட்சார்த்தியின் (பின்னர் சமர்ப்பிக்கப்படும்) முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

11. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவ தற்காக சாட்சி சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். இதற்காக-

(i) இதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப் படும்.

12. **பரீட்சைக் கட்டணம் :**

(அ) இப்பரீட்சைக்காக அறவிடப்படும் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீளச்செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் வேறு எந்தவொரு பரீட்சைக் கட்டணத்திற்காகவும் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

(ஆ) முழுமையான பரீட்சை அல்லது அதில் ஒரு பகுதிக்காக முதற்தடவையில் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) அதற்குப் பின்னர் அவ்வவ் தடவைகளுக்காக கட்டணங்கள் அறவிடப்படும்.

முழுமையான பரீட்சைக் கட்டணம் : ரூ. 400.
ஒரு பாடத்திற்காக : ரூ. 200.

முழுப் பரீட்சைக் கட்டணம் ரூ. 400, ஒரு பாடத்திற்காக ரூ. 200 என பரீட்சைக் கட்டணம், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வைப்பிலிட நாட்டில் எந்தவொரு மாவட்ட செயலகம், பிரதேச செயலகத்திலும் செலுத்தி, பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை உரிய இடத்தில் கழராது ஒட்டி, நிழற்படப் பிரதியை வைத்துக்கொள்வது பயன்மிக்கதாகும்.

13. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும். இச்சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்பட வேண்டும் என்பதனை அறியத்தருகிறேன்.

எஸ். எம். கோட்டாபய ஜயரத்ன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுறுபாய",
பெலவத்தை,
2013, ஏப்பிறல் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அதிபர் சேவையின் 1, 2-I, 2-II, 3 ஆம் வகுப்புகளின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2013**

Efficiency Bar Examination for officers in Class 1, 2-I, 2-II, 3 in Sri Lanka Principals Services - 2013

(அதிபர்/கோட்ட/வலயக் கல்விப் பணிப்பாளர்/மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பத்தரமுல்லை, பெலவத்தை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு பதிவுத்தபாலில் சமர்ப்பிக்கவும். பரீட்சையின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

1. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

2. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு முதலெழுத் துக்களுடன் பெயர் (முதலெழுத்துக்களுடன் ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
(உ-ம் : SILVA, H.A) :----.

(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. முகவரி :

(i) சொந்த :----.
(ii) அலுவலகம் :----.
(iii) அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

4. (i) அதிபர் சேவையின் வகுப்பு தரம் :----.
(ii) பாடசாலை/அலுவலகம் :----.
(iii) மாகாணக் கல்வித் திணைக்களம்/வலயக் கல்வி அலுவலகம் அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

5. (i) தேசிய அடையாள அட்டை இலக்கம் :
☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

6. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின் (அ) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கத்துடன் விண்ணப்பிக்கும் பாடங்கள் :

| | |
|---|---|
| பாட இலக்கம் 01 - தாபன விதிக்கோவை | |
| பாட இலக்கம் 02 - பாடசாலை நிதி நிருவாகம் | |
| பாட இலக்கம் 03 - கல்வி நிருவாகம் மற்றும் மேற்பார்வை | |

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

7. இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு முழுமையாக அல்லது பகுதியளவில் தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடவும். அவ்வாறாயின் பாட இலக்கம், ஆண்டு மற்றும் மொழியைக் குறிப்பிடவும்.

| பாடம் | பாட இலக்கம் | ஆண்டு | மொழிமூலம் |
|---|---|---|---|
| | | | |

8. பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் விபரம் :
பற்றுச்சீட்டு இலக்கம் :----.
பிரதேச/மாவட்ட செயலாளரின் அலுவலகம் :----.

(பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்)

மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிசெய்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி எனது பாடசாலை/அலுவலகத்தின் உத்தியோகத்தர் என உறுதிசெய்வதுடன் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டை உரியவாறு ஒட்டியுள்ளதாகவும் உறுதிசெய்கிறேன்.

----,
அதிபர்/கோட்ட/வலயக் கல்விப் பணிப்பாளர்/
மேலதிக கல்விப் பணிப்பாளர்/மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம் (அதிபராயின் பாடசாலையின் பெயரைக் குறிப்பிடுக.)
(தேவையற்ற சொற்களை நீக்கவும்.)

முகவரி :----.
திகதி :----.
(பொருத்தமற்ற சொல்லை நீக்கவும்.)

4-478

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.